# DEPOSITION OF WITNESS
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.
## Case No. CC.No. 21 of 2020
## Prosecution Witness : PW7

| | | | |
|---|---|---|---|
| **Name** | **: சரத்குமார்** | **Taluk** | **:** |
| **Father's Name** | **:** | **Calling** | **:** |
| **Village** | **:** | **Age** | **:** |

**(Accused present)**

**Dated.24.06.2026**

**முதல் விசாரணை**

நான் தற்போது இராணிப்பேட்டை மாவட்டம், குடிமை பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வு பிரிவில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு சம்பவத்தின் போது இலால்குடி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன். கடந்த 28.06.2019 ம் தேதி நான் நிலைய பொறுப்பில் இருந்த போது தங்கவேல் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று நிலைய குற்ற எண் 260/2019 இதச பிரிவுகள் 279, 304(A) ன் 16.30 மணிக்கு வழக்கினை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ 3 ஆகும். பதிவு செய்யப்பட்ட வழக்கு கோப்பினை விசாரணைக்காக காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். காவல் ஆய்வாளர் விசாரிக்க விபரம் சொன்னேன்.

**குறுக்கு விசாரணை(எதிரி தரப்பில்)**

இவ்வழக்னின் புகார் தாரர் TN 88 D 5493 கண்டெனர் லாரியை ஓட்டி வந்த நபர் என்றால் சரிதான். விபத்து பற்றி புகார் கொடுக்க சொல்லி

லாரி ஓட்டுனரிடம் நான் சொன்னேனா அல்லது லாரி ஓட்டுனரே விபத்து குறித்து புகார் கொடுத்தாரா என்றால் லாரி ஓட்டுனரே விபத்து குறித்து புகார் கொடுத்தார். நான் லாரி ஓட்டுனரை வழக்கில் இருந்து காப்பாற்ற வேண்டும் என்பதற்காக அவரிடமிருந்து புகாரை பெற்று இந்த வழக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு விபத்து நடைபெறவில்லை என்றாலும் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

ஒப்பம்/—சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/

ARUNACHALAM

Digitally signed by ARUNACHALAM
Date: 2026.06.24 11:42:05 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி